ஜூன் 17, 2012
தினகரன் அண்ணா நகர் சன்டே

## SHARP

### சங்கர நேத்ராலயா அகாடமியில்

# புதிய படிப்புகள் அறிமுகம்



மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓர் அங்கமான சங்கர நேத்ராலயா அகாடமியில், இந்தாண்டு 12ம் வகுப்பு(அறிவியல்) முடித்த மாணவ, மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதம் உள்ள பயனுள்ள சில டிப்ளமோ, டிகிரி படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

டிப்ளமோ இன் கண் மருத்துவ உதவியாளர், டிப்ளமோ இன் ஆபரேஷன் தியேட்டர் மற்றும் அனஸ்தீசியா, டிப்ளமோ இன் ரிப்ராக்சன் போன்ற படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்படிப்புகள் 2 ஆண்டுகள் கொண்டது.

டிகிரியை பொறுத்தவரை பி.எஸ்.சி லேப் டெக்னாலஜி 3 ஆண்டுகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. எம்.பி.ஏ இன் ஹாஸ்பிட்டல் மேனேஜ்மென்ட் (முழுநேர வகுப்பு) 2 ஆண்டுகளும், எக்சிகியூடிவ் எம்.பி.ஏ இன் ஹாஸ்பிட்டல் மேனேஜ்மென்ட் ஆன்லைன் வகுப்பு 1 ஆண்டும் கற்றுத் தரப்படுகிறது. குறுகிய கால மருத்துவமனை மேலாண்மை படிப்புகள் இவைகளை ஆரம்பித்துள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பங்களை நேரிலோ அல்லது www.thesnacademy.ac.in என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் வரும் 30ம் தேதி. தொடர்புக்கு: மகாலிங்கம், அகாடமி அதிகாரி, சங்கர நேத்ராலயா அகாடமி, சென்னை- 600 006. இமெயில்- mahali@snmail.org, செல்:97104 85295.